# தூத்துக்குடி மாநகராட்சி

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

## (இருஉறை முறை)

கோப்பு எண் இ3/2338/2022 தேதி 27.06.2022

தூத்துக்குடி மாநகராட்சியில் பொதுநிதி திட்டம் 2022–23 ன் கீழ் செய்யப்படும் கீழ்க்கண்ட பணிக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மைய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் **15.07.2022** அன்று மாலை 3.00 மணி வரை சேர்ப்பிக்கவேண்டும். பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் **அன்றைய தினம்** மாலை 3.30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி திறப்பு குழுவால் வருகை தரும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி நமுனா **15.07.2022** -ம் தேதி பிற்பகல் 3.00 மணிக்குள் அதற்குரிய விலையை வங்கி கேட்பு வரைவோலையாக ஆணையாளர், தூத்துக்குடி மாநகராட்சி/ மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய ரசீது இணைத்து மனு செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று எதிர்பாராமல் அரசு விடுமுறை என அறிவித்தால் அதற்கு அடுத்த வேலை நாளில் பெற்றுக்கொள்ளப்படும். இதர விவரங்களை மைய அலுவலக பொறியியல் பிரிவில் அலுவலக நாட்களில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

| வ. எண். | மதிப்பீட்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரு. இலட்சம் | முன் வைப்புத் தொகை ரு. | ஒப்பந்தப்புள்ளி நமுனா +12 % GST வரி | ஒப்பந்தக் காரர் வகுப்பு | ஒப்பந்ததாரரின் தகுதி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 43/22-23 /AEE(ES) | Operation and Maintenance of LED Street Lights including routine break down Maintenance and Preventive Maintenance works in 60 Wards of Thoothukudi Town for the Period of Three Month | 21.70 | 21,700/- | 6720/- | 3 மாதம் | தகுதி வாய்ந்த நிறுவனம் |

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களுக்கு 01.07.2022 காலை 10.00 மணி முதல் 15.07.2022 மாலை 3.00 மணி வரை அதற்கான தொகைக்கு வங்கி கேட்பு வரைவோலையாக ஆணையாளர், தூத்துக்குடி மாநகராட்சி என்ற பெயருக்கு இணைத்து பெற்றுக் கொள்ளலாம். மேலும் www.tenders.tn.gov.in, என்ற இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி குறித்த முழு விபரங்கள் பெறலாம்.

*நிபந்தனைகள்*

1. முன்வைப்புத்தொகை மற்றும் ஒப்பந்தபுள்ளி நமுனாவுக்கு வங்கி கேட்பு வரைவோலை ஆணையாளர் பெயருக்கு எடுத்து இணைக்கவேண்டும் அல்லது மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய ரசீது இணைக்கவேண்டும். மேலும் வங்கி கேட்பு வைப்புத்தொகையானது ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு தேதிக்குப் பின்னர் எடுக்கப்பட்டிருக்கவேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி நமுனா தனி உறையிலும் மற்றொரு உறையினுள் (1)முன்வைப்புத்தொகைக்கான வங்கி வரைவோலை அல்லது மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய ரசீது மற்றும் தொழில்நுட்பத்திற்கு தேவையான ஆவண நகல்கள் முதலியன வைக்கப்படல் வேண்டும். (2) விலைப்புள்ளி உறை வைக்கப்பட வேண்டும் மேலும் இரு உறைகளையும் தனித்தனியே மூடி அரக்கு முத்திரையிட்டு பின் மூன்றாவது பெரிய உறையினுள் வைத்து மூடி அரக்கு முத்திரையிட்டு ஒப்படைக்கவேண்டும். மேற்கண்ட மூன்றாவது உறைகளின் மேல்பகுதியில் 1) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண், 2) பணியின் வரிசை எண், மற்றும் மதிப்பீட்டு எண் 3) பணியின் பெயர், 4) மதிப்பீட்டுத் தொகை ஆகியவை தெளிவாக குறிப்பிடப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு அரக்கு முத்திரையின்றி பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படமாட்டாது.
3. தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்/நிறுவனங்களின் விலைப்புள்ளி உறை மட்டும் திறக்கப்படும். தொழில்நுட்ப தகுதியில்லாத நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளிகள் நிராகரிக்கப்படும்.

4. ஒப்பந்தவிபரப்படி மேற்குறிப்பிட்ட காலவரையறுக்குள் பணிமுன்னேற்றம் இல்லாதநிலை இருப்பின் ஒப்பந்தவிதிகளின்படி அபராதம் விதிக்கப்படும்.
5. அபராதம் விதிக்கப்பட்டும் பணிகளில்தொடர் முன்னேற்றம் இல்லாதிருந்தால் வேலைஉத்தரவு இரத்து செய்ய நடவடிக்கைமேற்கொள்ளப்படும்.
6. இம்மாநகராட்சி எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் எவ்வித காரணமின்றி நிராகரிக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு எனத் தெரிவிக்கப்படுகின்றது.
7. ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்வதில் ஆணையாளர் அவர்களின் முடிவே இறுதியானதாகும்.

குறிப்பு:

(1) காலதாமதமாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். அஞ்சல் துறையின் காலதாமதத்திற்கு மாநகராட்சி பொறுப்பாகாது.
2) ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும் நாள் மற்றும் திறக்கப்படும் நாள் எதிர்பாராதவிதமாக விடுமுறை என அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
3) ஒப்பந்தப்புள்ளி கொடுக்கத் தகுதி வாய்ந்த ஆவணங்கள் ஒப்பந்தப்புள்ளியோடு தவறாமல் இணைக்கப் பெறவேண்டும்.
4) வரையறுக்கப்பட்ட தகுதி இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கொள்ள ஒப்பந்ததாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொலைபேசி எண். 0461- 2326901-903
இணையதள முகவரி **commr.thoothukudi**@tn.gov.in

T. Charusree 27/6/22

ஆணையாளர்
தூத்துக்குடி மாநகராட்சி

27/6/2022

பெறுநர்
1) மாண்புமிகு மேயர் அவர்கள் மேஜைக்கு
2) ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் அவர்கள் மேஜைக்கு,
3) உதவிசெயற்பொறியாளர் / மண்டல உதவி ஆணையர் தூத்துக்குடி மாநகராட்சி,
4) மாநகராட்சி மண்டல விளம்பர பலகை